**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 13.06.2024
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**இன்றைய நிகழ்ச்சி (14.06.2024)**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தேர்வுக்கூட வளாகத்தில் 14.06.2024 அன்று காலை 9.00 மணிக்கு உலக இரத்ததான தினத்தை முன்னிட்டு இரத்த தான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சிங்காநல்லூர் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் இஎஸ்ஐ மருத்துவமனை உடன் இணைந்து இந்த முகாம் நடத்தப்பட உள்ளது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி, இந்த முகாமை துவக்கி வைக்கின்றார். சிங்காநல்லூர் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் இஎஸ்ஐ மருத்துவமனையின் முதன்மையர் டாக்டர்.எம்.ரவீந்திரன், எம்.டி. தலைமை வகிக்கின்றார். இஎஸ்ஐ ரத்த வங்கியின் தலைமை மருத்துவர் டாக்டர்.உமாசரோஜினி தனது குழுவினருடன் முகாமை நடத்தவுள்ளார். முகாம் துவங்குவதற்கு முன்பாக வேளாண்மைப் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் (200 நபர்கள்) இரத்த தான விழிப்புணர்வு பேரணியை நடத்தவுள்ளனர்.

நாள்: 14.06.2024 (வெள்ளிக்கிழமை) நேரம் : காலை 9.00 மணி

இடம் : பல்கலைக்கழக தேர்வுக்கூட வளாகம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**

இணைப்பு: நிகழ்ச்சி அழைப்பிதழ்